# 23-01-2025 செய்தி

## தேசிய சுகாதார இயக்கம் மேலும் 5 ஆண்டுகளுக்கு நீட்டிப்பு

- நாட்டில் பொது சுகாதார சேவைகள் மேம்பாட்டுக்கான தேசிய சுகாதார இயக்கத்தை மேலும் 5 ஆண்டுகளுக்கு நீட்டிக்க மத்திய அமைச்சரவை ஒப்புதல் வழங்கியது.
- தேசிய சுகாதார இயக்கத்தின் குறிப்பிடத்தக்க பங்களிப்பால் 2030-ஆம் ஆண்டுக்கு முன்பாகவே இத்துறையில் நிலையான வளர்ச்சி இலக்குகள் எட்டப்படும் என்றும் மத்திய அரசு தெரிவித்துள்ளது.

**சாதனைகள் என்னென்ன?**

- தேசிய சுகாதார இயக்கத்தின் சாதனைகள் அமைச்சரவைக் கூட்டத்தில் எடுத்துரைக்கப்பட்ட நிலையில், இது தொடர்பாக மத்திய அரசு வெளியிட்ட செய்திக் குறிப்பில் கூறப்பட்டுள்ளதாவது:
- சுகாதாரத் துறையில் மனிதவள விரிவாக்கம், முக்கியத்துவம் வாய்ந்த சுகாதாரப் பிரச்னைகளுக்கு தீர்வு, சுகாதார அவசர நிலைகளுக்கு ஒருங்கிணைந்த தீர்வை கண்டறிதல் போன்ற தொடர் முயற்சிகள் வாயிலாக நாட்டின் பொது சுகாதார சேவைகள் மேம்பாட்டில் தேசிய சுகாதார இயக்கம் குறிப்பிடத்தக்க பங்களிப்பை வழங்கியுள்ளது.
- மூன்று ஆண்டுகளில் தாய்-சேய் நலம். நோய்கள் ஒழிப்பு, சுகாதார உள்கட்டமைப்பு வசதிகள் மேம்பாடு என தேசிய சுகாதார இயக்கம் கணிசமான அளவில் முன்னேற்றம் கண்டுள்ளது.

**220 கோடி கொரோனா தடுப்பூசிகள்:**

- இந்த இயக்கத்தின் வாயிலாக கொரோனா காலகட்டத்தில் அனைவருக்கும் தரமான சுகாதார சேவைகள் உறுதி செய்யப்பட்டன. 2021, ஜனவரி முதல் 2024, மார்ச் வரை 220 கோடி தடுப்பூசி தவணைகள் செலுத்தப்பட்டன.
- பேறுகால உயிரிழப்பு, பச்சிளங் குழந்தைகள் உயிரிழப்பு, 5 வயதுக்கு உள்பட்ட குழந்தைகளின் உயிரிழப்பு ஆகியவை கணிசமாக குறைந்துள்ளன.
- தேசிய காசநோய் ஒழிப்புத் திட்ட முயற்சிகளால், 2015-ஆம் ஆண்டில் 1,00,000 பேருக்கு 237 என இருந்த காசநோய் பாதிப்பு 2023-ஆம் ஆண்டில் 195 ஆக குறைந்துள்ளது.

**இந்திரதனுஷ் இயக்கம்:**

- மலேரியா பாதிப்பு மற்றும் இறப்புகள் முறையே 13.28 சதவீதமும். 3.22 சதவீதமும் குறைந்துள்ளன.
- தீவிரப்படுத்தப்பட்ட இந்திரதனுஷ் தடுப்பூசி இயக்கத்தின்கீழ், 34.77கோடிக்கும் அதிகமான குழந்தைகளுக்கு தடுப்பூசி செலுத்தப்பட்டது.
- பிரதமரின் தேசிய டயாலிசிஸ் திட்டத்தின்கீழ், 2023-24-இல் 4.53 லட்சத்துக்கும் மேற்பட்டோர் பலனடைந்தனர்.
- அரிவாள் செல் ரத்தசோகை ஒழிப்பு இயக்கத்தின்கீழ் பழங்குடியின பகுதிகளில் 2.61 கோடிக்கும் மேற்பட்டோருக்கு பரிசோதனை மேற்கொள்ளப்பட்டுள்ளது.
- 2023 ஜனவரியில் தொடங்கப்பட்ட யு-வின் இணையதளம் மூலம் கர்ப்பிணிகள், பச்சிளங் குழந்தைகள், சிறார்களுக்கு சரியான நேரத்தில் தடுப்பூசிகள் செலுத்தப்படுவது உறுதி செய்யப்படுகிறது என்று செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## தென் மாநிலங்களின் கலாச்சாரங்கள் பிரதிபலிப்பு

**குடியரசுத் தலைவரின் தேநீர் விருந்து அழைப்பிதழ்**

- 2025 ஆம் ஆண்டு குடியரசு தினத்தையொட்டி தனது மாளிகையில் குடியரசுத் தலைவர் அளிக்கவிருக்கும்

  'அட் ஹோம்' எனப்படும் தேநீர் விருந்து வரவேற்புக்கு அழைக்கப்படுபவர்களுக்கு, இந்தியாவின் ஐந்து தென்மாநிலங்களின் கலை மற்றும் கலாச்சாரத்தைப் பிரதிபலிக்கும் பொருள்கள் இடம் பெற்ற கைவினைப்பெட்டி அழைப்பிதழை (படம்) குடியரசுத் தலைவர் திரௌபதி முர்மு வழங்கியுள்ளார்.
- இந்த பொருள்கள், நிம்மலகுண்டா கைவினைஞர்களின் கலம்காரி ஓவியங்களால் அலங்கரிக்கப்பட்ட மூங்கில்-நெசவுப் பெட்டியில் அலங்கரிக்கப்பட்டு, அதனுள் அழைப்பிதழ் வைக்கப்பட்டுள்ளது. இது ஆந்திர மாநிலத்தைப் பிரதிபலிக்கிறது. மறுபயன்பாட்டுக்காக வடிவமைக்கப்பட்ட இகாட்- போச்சம்பள்ளி துணி உறை, தெலங்கானாவைப் பிரதிபலிக்கிறது.
- இவற்றுடன் கர்நாடகத்தின் மைசூரு பாரம்பரிய கஞ்சிஃபா கலையை சித்தரிக்கும் குளிர்சாதன பெட்டியில் ஒட்டக்கூடிய காந்த ஓவியம், தமிழகத்தின் காஞ்சிபுரம் பட்டு நெசவுத் திறனை பறைசாற்றும் சிறு முடிச்சுப்பை, ஆந்திரத்தின் கலைநயம் மிக்க சிறு உருவபொம்மைகள், கேரள கைவினைஞர்களால் 'திருகு' இலைகளைக் கொண்டு நெய்யப்பட்ட புக்மார்க் பக்கக்குறி அட்டை ஆகியவை கைவினை அழைப்பிதழ் பெட்டியில் உள்ளன.